செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் திருமதி. சொ. கற்பகம், எம்.எஸ்சி., எம்.ஏ., எம்.ஏ., எம்.பில்., எம்.எட்.,

ந.க.எண். 8670 /அ1/2023. நாள். 27.11.2024.

பொருள்: பள்ளிக் கல்வித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படையில் நியமனம் – பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர் திரு.ஆர்.இளங்கோவன், பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர், மாவட்டக் கல்வி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் - என்பவரின் வாரிசுதாரர் மகள் திருமதி.இ.ஆர்த்தி, இளநிலை உதவியாளர், அரசு மேல்நிலைப் பள்ளி, கண்டிகை. – என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியினை வரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செங்கல்பட்டு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண். 4031/அ1/2022, நாள். 19.10.2022.
2. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் (க்யூ1) துறை நாள். 26.02.2021.
3. அரசாணை (நிலை) எண். 151 பள்ளிக் கல்வி (ப.க.(1(1)) துறை நாள் 09.09.2022.
4. அரசாணை (நிலை) எண். 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள் 08.03.2023
5. அரசு கடித எண். 1308/ப.க.4(1)/2023-1 பள்ளிக் கல்வித் துறை தலைமைச் செயலகம் நாள்.06.11.2023.
6. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 41477/ஜே/இ1/2022, நாள். 15.12.2023.
7. அரசுக் கடித எண். 4419/தொ.க.1(1)/2024-1. நாள்.17.05.2024
8. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 026062/ஜே/இ1/2023, நாள். 22.05.2024.
9. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள், ந.க.எண். 079074/ஜே/இ3/2024, நாள். 23.08.2024.
10. கண்டிகை, அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் கடிதம் ந.க.எண். 169/2023, நாள். 27.12.2023.

=======

விழுப்புரம் மாவட்டம், மாவட்டக் கல்வி அலுவலகத்தில் பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து பணிக்காலத்தில் 17.05.2014 அன்று காலமான திரு.ஆர்.இளங்கோவன் என்பவரின் வாரிசுதாரர் மகள் திருமதி. இ. ஆர்த்தி என்பவருக்கு பார்வை (1)ல் காணும் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக செங்கல்பட்டு மாவட்டம், கண்டிகை, அரசு உயர்நிலைப் பள்ளியில் 20.10.2022 பிற்பகல் நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. அன்னாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்யக் கோரி பார்வை (10)ன்படி கருத்துரு பெறப்பட்டுள்ளது.

பார்வை-(2)ல் காணும் அரசாணையில் பத்தி 5.1 மற்றும் 5.2ல் கீழ்க்காணுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5.1) 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது.

(5.2) மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அவரவர் கட்டுபாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறைசெய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசுப் பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவித்து ஆணையிடப்பட்டிருந்தது.

பார்வை-5ல் காணும் 06.11.02023 நாளிட்ட அரசுக் கடிதத்தில்

கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்திட "தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெற தேவையில்லை" என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், இனி வருங்காலங்களில் கருணை அடிப்படையில் பணி நியமனங்களில் விதித் தளர்வு இல்லாத நேர்வுகளில் இளநிலை உதவியாளர் பதவியில் உரிய அலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்த பின் அரசளவில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

பார்வை (7)ல் காணும் அரசுக் கடிதத்தில்

"சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்கள் (Appointing Authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளரின் பணியினை வரன்முறை செய்திடுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது"

எனவே தனியருக்கு எந்தவித விதித்தளர்வு மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாத நிலையில் பார்வை-7ல் காணும் அரசுக் கடிதத்தின்படியும் பார்வை (10)ல் காணும் கடிதத்தின் மூலம் பெறப்பட்ட அலுவலரின் பரிந்துரையின் பேரில் செங்கல்பட்டு மாவட்டம், கண்டிகை, அரசு மேல்நிலைப் பள்ளி, இளநிலை உதவியாளர் திருமதி. இ. ஆர்த்தி என்பாருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்ற நாளான 20.10.2022 பிற்பகல் முதல் வரன்முறைப்படுத்தப்படுகிறது.

மேற்படி பணியாளர் திருமதி. இ. ஆர்த்தி என்பார் பணியேற்ற நாள் முதல் மூன்றாண்டு காலத் தொடர் பணியில் ஈராண்டு காலத்தில் தகுதிகாண் பருவத்தை திருப்திகரமாக முடிக்க வேண்டுமெனவும், அறிவுறுத்தப்படுகிறார். தகுதிகாண் பருவ காலத்தில் மேற்படி தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளில் குறிப்பிட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்வு பெற வேண்டுமென்றும் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு – அசல் பணிப்பதிவேடு

27/11/24

முதன்மைக் கல்வி அலுவலர்

27.11.24 செங்கல்பட்டு.

பெறுநர் -

திருமதி. இ. ஆர்த்தி, இளநிலை உதவியாளர்

அரசு மேல்நிலைப் பள்ளி, கண்டிகை (உரிய வழியாக)

நகல் -

1. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை) செங்கல்பட்டு
3. சார்ந்தப் பள்ளித் தலைமையாசிரியர்